புதுச்சேரி
(சுருக்கம்)

இந்து சமய நிறுவனங்கள் & வக்ஃபு துறை - புதுச்சேரி மாநிலம் நெட்டப்பாக்கம் கொம்யூன், மடுகரை, அருள்மிகு ஸ்ரீ மரகதவள்ளி அம்பாள் உடனுறை ஸ்ரீ மரக்காலீஸ்வரர், தேவஸ்தானத்திற்கு அறங்காவலர் வாரியம் அமைத்தல் – ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

---

## இந்து சமய நிறுவனங்கள் மற்றும் வக்ஃபு துறை

அரசு ஆணை ப.வ.எண் 116/இசநி/கோ.3/2020/1270 புதுச்சேரி, நாள்: 30.09.2020

பார்வை: 1) இவ்வலுவலக ஆணை எண். 3611/இசநி/கோ.3/2020 நாள்: 08.05.2020.
2) இவ்வலுவலக கோப்பு எண் 3611/இசநி/கோ.3/2020, நாள்: 15.09.2020

-------

ஆணை:

புதுவை மாநிலம் நெட்டப்பாக்கம் கொம்யூன், மடுகரை, அருள்மிகு ஸ்ரீ மரகதவள்ளி அம்பாள் உடனுறை ஸ்ரீ மரக்காலீஸ்வரர், தேவஸ்தானத்தை நிர்வகிக்கும் பொருட்டு பார்வை (1)-ல் குறிப்பிட்டுள்ள அரசு ஆணை மூலம் நியமிக்கப்பட்ட திரு G. காமராஜ் கோபு, (இந்து சமய அறநிலையத் துறையில் செயல் அலுவலர் நிலை III) அவர்களால் சிறப்பு அதிகாரி என்கிற நிலையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

2. ஆலயத்தை மேலும் செம்மையாக நிர்வகிக்கும் பொருட்டு இச்சிறப்பு அதிகாரிக்கு பதிலாக மேற்கூறிய திருக்கோயிலுக்கு, ஒரு அறங்காவலர் வாரியம் அமைத்து நிர்வகிப்பது இன்றியமையாதது என்று அரசால் கருதப்படுகறது.

3. எனவே, 1972-ஆம் ஆண்டு புதுச்சேரி இந்து சமய நிலையங்கள் சட்டம் 4(1)-ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, புதுச்சேரி, நெட்டப்பாக்கம் கொம்யூன்,மடுகரை, அருள்மிகு ஸ்ரீ மரகதவள்ளி அம்பாள் உடனுறை ஸ்ரீ மரக்காலீஸ்வரர், தேவஸ்தானத்திற்கு பின்வரும் ஐந்து நபர்களைக் கொண்ட ஓர் அறங்காவலர் வாரியத்தை அரசு உடனடியாக அமைக்கிறது.

திருவாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| (1) | ரா. குழந்தை வேலு, த/பெ இரா்மகிருஷ்ணன், எண் 31, நடு வீதி, மடுகரை, நெட்டப்பாக்கம் கொம்யூன், புதுச்சேரி-605105. | - | தலைவர் |
| (2) | அ. செல்வகுமார், த/பெ அருணாசலம், எண் 34, ரெட்டியார் வீதி, மடுகரை, நெட்டப்பாக்கம் கொம்யூன், புதுச்சேரி-605105. | - | துணைத் தலைவர் |
| (3) | ஜெ. குமார கிருஷ்ணன், த/பெ ஜெகநாதன், எண் 9, கம்பத்தம் வீதி, மடுகரை, நெட்டப்பாக்கம் கொம்யூன், புதுச்சேரி-605105. | - | செயலாளர் |
| (4) | ரா. சிவபூஷணம், த/பெ ராஜகோபால், எண் 26, வானியர் வீதி, மடுகரை, நெட்டப்பாக்கம் கொம்யூன், புதுச்சேரி-605105. | - | பொருளாளர் |
| (5) | சு. செல்வி, த/பெ சுப்ரமணியன், எண் 1, பள்ளிக்கூட வீதி, பெரியபேட், மடுகரை, நெட்டப்பாக்கம் கொம்யூன், புதுச்சேரி-605105. | - | உறுப்பினர் |

4. புதிய அறங்காவலர் வாரியம் உடனடியாக திருக்கோயில் நிர்வாகத்தை அதன் அசையும், அசையாச் சொத்துக்கள், இதர ஆவனங்களுடன் சிறப்பு அதிகாரியிடமிருந்து பொறுப்பேற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

5. 1972-ஆம் ஆண்டு புதுச்சேரி இந்து சமய நிலையங்கள் சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அறங்காவலர் வாரியத்தினர் கடைபிடிக்கவேண்டிய சில முக்கிய பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(i) கோயிலுக்கு சொந்தமான காலி மனைகள், கோயிலை சுற்றியுள்ள இடங்கள் மற்றும் கோயில் குளங்களை தூர்வாருதல் மற்றும் சுத்தம் செய்தல் இவைகள் உள்ளடக்கிய ஒரு ஆண்டறிக்கையினை சமர்பித்தல் வேண்டும்.

(ii) நன்கொடையாளர்களால் மேற்கொள்ளப்படும் பணிகளை நிறைவேற்ற முழு மூச்சுடன் ஈடுபடுதல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு வருடத்திற்குமான உத்தேச வரவு செலவு கணக்குகள் மார்ச் மாத காலத்திற்குள் சமர்பித்தல் வேண்டும்.

(iv) கோயில் வரவு செலவு கணக்குகளை முறையாக பராமரித்தல் மற்றும் கணக்கினை ஆண்டுக்கு ஒருமுறை கணக்கு மற்றும் கருவூலத் துறை மூலம் தணிக்கை செய்தலை உருதி செய்ய வேண்டும்.

(v) சிறப்பு அதிகாரியின் கடமைகளையும் பொறுப்புகளையும் இந்து சமய ஆலய விதிகள் 1975-ன் பிரிவு 5இன் படி செவ்வனே நிறைவேற்றுதல் வேண்டும்.

6. அறங்காவல் வாரியத்தின் பதவிக்காலம் இவ்வரசாணை பிறபிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும். இதற்கிடையில் அரசு வாரியத்தை நீக்கினால் தவிர அல்லது தகுதி இழக்கச்செய்தால் தவிர அல்லது வாரிய உறுப்பினர்கள் தங்களது பதவிகளை இராஜினாமா செய்யுங்கால் அவர்களின் இராஜினாமாவை அரசு ஏற்றுக்கொண்டால் தவிர, வாரியம் பதவியில் இருப்பதாக கருதப்படும்.

/துணைநிலை ஆளுநரின் ஆணைப்படி/

Despatched on 12/10/20

30/09/2020

(அ. சிவசங்கரன்)
அரசு சார்புச் செயலர் (கோயில்கள்)

O/C 30/9/2020

பெறுநர்:

| | |
|---|---|
| ரா. குழந்தை வேலு, த/பெ இராமகிருஷ்ணன், எண் 31, நடு வீதி, மடுகரை, புதுச்சேரி-605105 | இவ்வரசாணை கிடைக்கப்பெற்ற ஒரு வாரகாலத்திற்குள் திருக்கோயிலின் பொறுப்புகளை அதன் அசையும், அசையாச் சொத்துகள் இதர ஆவணங்களுடன் பதவி விலகும் சிறப்பு அதிகாரியிடமிருந்து முழுமையாகப் பெற்றுக்கொண்டு, அதுகுறித்து ஓர் அறிக்கையை பட்டியல் நகலொன்றுடன் ஆணையர், இந்து சமய நிறுவனங்கள், புதுச்சேரி அவர்களுக்கு நேரில் சமர்ப்பிக்குமாறும், அவ்வறிக்கையின் நகலொன்றினை துணை இயக்குநர், கணக்கு மற்றும் கருவூல இயக்கம் (ஆலய தணிக்கை மற்றும் ஆய்வு பிரிவு), புதுச்சேரி அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்படுகிறது. மேலும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையைப் பின்பற்றி நிர்வாகம் செய்யுமாறு கோரப்படுகிறது. |
| அ. செல்வகுமார், த/பெ அருணாசலம், எண் 34, ரெட்டியார் வீதி, மடுகரை, புதுச்சேரி-605105. | |
| ஜெ. குமார கிருஷ்ணன், த/பெ ஜெகநாதன், எண் 9, கம்பத்தம் வீதி, மடுகரை, புதுச்சேரி-605105 | |
| ரா. சிவபூஷணம், த/பெ ராஜகோபால், எண் 26, வானியர் வீதி, மடுகரை, புதுச்சேரி-605105. | |
| சு. செல்வி, த/பெ சுப்ரமணியன், எண் 1, பள்ளிக்கூட வீதி, பெரியபேட், மடுகரை, புதுச்சேரி-605105. | |

நகல் பெறுநர்:

1 திரு G. காமராஜ் கோபு, இந்து சமய அறநிலையத் துறை, புதுச்சேரி. — திருக்கோயிலின் பொறுப்புகளை அதன் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் இதர ஆவனங்களுடன் புதியதாக அமைக்கப்பட்டுள்ள அறங்காவலர் வாரியத்திடம் ஒருவார காலத்திற்குள் முழுமையாக ஒப்படைக்குமாறு கோரப்படுகிறது.

2. இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, புதுச்சேரி – மேற்காண் அரசு ஆணையை அரசிதழில் வெளியிட்டு அதன் பத்து நகல்களை இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு கோரப்படுகிறது.

3. ஆணையர், இந்து சமய நிறுவனங்கள், புதுச்சேரி.

4. துணை இயக்குநர், கணக்கு மற்றும் கருவூல இயக்கம் (ஆலய தணிக்கை மற்றும் ஆய்வு பிரிவு), புதுச்சேரி.

5. மேலாளர் (கோயில்கள்)/நிர்வாக அதிகாரி/அரசு ஆணைகோப்பு/கோ.1//கோ.5/கோ.6/ கணிணி/அதஉ/உதிரிகள்.